தினமணி சென்னை

சனிக்கிழமை, 22 பிப்ரவரி 2020

# தேசிய சீனியர் பூப்பந்து: ரயில்வே, கர்நாடகம் சாம்பியன்



சாம்பியன் பட்டம் வென்ற கர்நாடக மகளிர்

**சென்னை, பிப். 21:** தேசிய சீனியர் பூப்பந்து போட்டியில் ஆடவர் பிரிவில் இந்தியன் ரயில்வேயும், மகளிர் பிரிவில் கர்நாடக அணிகளும் சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றின.

தமிழ்நாடு மாநில பூப்பந்து சங்கம், செயின்ட் ஜோசப் கல்வி நிறுவனங்கள் சார்பில் 65-ஆவது தேசிய சீனியர் பூப்பந்து சாம்பியன் போட்டிகள் கடந்த 17-ஆம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. இதன் இறுதிச் சுற்று ஆட்டங்கள் வெள்ளிக்கிழமை நடைபெற்றன.

ஆடவர் பிரிவில் இந்தியன் ரயில்வே 24-35, 35-28, 35-21 என்ற கேம் கணக்கில் தமிழகத்தை போராடி வென்று பட்டத்தைக் கைப்பற்றியது.

மகளிர் பிரிவு இறுதிச் சுற்றில் கர்நாடக அணி 35-31, 27-35, 35-24 என்ற கேம் கணக்கில் தமிழகத்தை வீழ்த்தி பட்டம் வென்றது.

240220